# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

# OS.No.22/2024

dated : 20.11.2025

D.W.3

Name முத்துப்பாண்டி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக ஒரு பாகப்பிரிவினை செய்யப்படும் முன்பு பிரிவினை செய்யப்பட வேண்டிய சொத்துக்கள் அனைத்தையும் மதிப்பிட்டு அதனடிப்படையில் பாகப்பிரிவினை செய்யப்படும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என் அக்கா கணவர். அவர்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நஞ்சை எத்தனை ஏக்கர் புஞ்சை எத்தனை ஏக்கர் காலி மனைகள் எவ்வளவு என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி என் சகோதரியை திருமணம் செய்யும் முன்பே எனக்கு உறவினர் ஆவார். அவர்களது ஊர் சிவகிரி தாலுகா பட்டக்குறிச்சி. குருசாமியின் தந்தை 2005 ம் ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் இறந்திருப்பார் குறிப்பாக என்னால் கூற இயலாது தேதியும் ஞாபகமில்லை. சுமாராக மார்ச் மாதம் 3 வது வாரம் இறந்திருப்பார். யார் யாருக்கு எவ்வளவு பங்கு விகித்தாச்சாரம் என பிரித்துக் கொண்டார்கள் என்று தெரியாது. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறுவது போல் வாய்மொழிப் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக கூறுவதும் அதனடிப்படையில் தனிதனியே சுவாதீனத்திற்கு

எடுத்துக்கொண்டதாக கூறுவதும் உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட வீடு எந்த தேதியில் இடிக்கப்பட்டது என்று ஞாபகமில்லை. நான் அப்போது வெளியூரில் இருந்தேன். புதிதாக கட்டப்பட்ட வீட்டிற்கு வரைபட அனுமதி பெற்றார்களா என்றும் தெரியாது. எப்போது எந்த தேதியில் புதுமனை புகுவிழா நடத்தப்பட்டது என்றும் தெரியாது. நான் கூறுவது அனைத்தும் வழக்கிற்காக கூறப்படும் பொய் என்று சொன்னால் சரியல்ல. குருசாமி எனது நெருங்கிய உறவினர் என்பதால் அவர்கள் மீது கொண்ட அக்கறை காரணமாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரி குடும்பத்தினருக்கு அதிக சொத்துக்கள் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் வாதிகள் பங்குரிமையை மோசடி செய்யும் எண்ணத்துடன் வாய்மொழிப் பாகப்பிரிவினை நடைபெற்றதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 வாதிகள் சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் எந்த தேதி, வருடம், மாதம் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றும் எனக்கு தெரியாது. குருசாமி அந்த விசாரணைக்கான வாக்குமூலத்தில் என்னென்ன விவரங்கள் எழுதியிருந்தார்கள் என்று என்னால் கூற இயலாது. நான் கூறுவது போல் பாகப்பிரிவினை ஏதும் நடைபெறவில்லை என்றும் எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.20 18:14:34 +0530